# திருப்பள்ளி யெழுச்சி

துலக்க மிகுத்தொளிர் சூரிய னுன்றன்
சோதி முகம்பெறத் துன்னி யெழுந்தான்
பிலக்க ணுறைதரு நாகரும் பிறரும்
பெட்பொடு பத்திமை பேணி யடைந்தார்
இலக்க முடம்பிடும் பைக்கென வஞ்சி
யினிப்பிறப் பொழிகென வெய்திடு மன்பர்
கலக்க மொழித்தருள் களைகணா திருவேங்
கடரம ணாபள்ளி யெழுந்தரு ளாயே. 1

கிழக்கு வெளுத்தது கிளந்தன கிளிகள்
கிளரொளிச் சேவல்கள் கூவின சங்கின்
முழக்க மெழுந்தது முடவ னெழுந்தான்
மூடிய காரிருண் முற்று மொழிந்த
வழக்க முறைப்படி வானர மகளிர்
வாழ்த்து நலம்பெற வழுத்திநிற் கின்றார்
கழற்கன வொளிதனி னகிலமுங் கவர்வேங்
கடரம ணாபள்ளி யெழுந்தரு ளாயே. 2

நலத்தகு தாமரை நாயக னெழுந்தான்
நள்ளிரு ளகன்றது நாத்திக ருள்ளத்
தலத்தக மூட்டிய வடிச்சியர் வானின்
றடைந்தனர் சேவை யவாவிநிற் கின்றார்
மலத்தடை நீக்கியிம் மண்ணகத் தோரை
வலியவந் தாட்கொளு மாவருட் கடலே
கலத்தவ முனிவருங் காணருந் திருவேங்
கடரம ணாபள்ளி யெழுந்தரு ளாயே. 3

நளிகட னின்றுமே னணுகினன் கதிரோன்
ஞான திவாகர னாகவென் சிந்தைத்
தளியி லமர்ந்தவந் தண்குரு நாதா
தாமரை மலர்ந்தன தங்கக்கை யம்மா
எளியனை யாட்கொளத் திருவுளத் தெண்ணி
யிங்கெழுந் தருளிநின் னின்னருள் சுரந்தே
களியமு தூட்டிய கருணையங் கடல்வேங்
கடரம ணாபள்ளி யெழுந்தரு ளாயே. 4

பங்கய மலர்ந்தன பரிதியி னொளியாற்
பனிமதி மங்கினன் பயின்றன பாடல்
சங்கொடு பேரிகை தழங்குறு மொலியாற்
சாத்திரக் கற்பனை சாய்ந்தன வம்மா
எங்கு மெழுந்தன யாழொடு வீணை
யெத்திசை யோரும்வந் தீண்டினர் ரீங்கே
கங்கணங் காத்திடக் கட்டிய திருவேங்
கடரம ணாபள்ளி யெழுந்தரு ளாயே. 5

மடலணி தாமரை மலர்ந்திட வுன்னை
மறையவர் வாழ்த்தொலி பம்பிய வான
நடன வரங்கிடை நண்ணினன் கதிரோன்
ஞானிகள் சிந்தையி னடநவில் கூத்தா
தடமதில் சூழ்திருச் சுழியலம் பதிவாய்த்
தண்ணளி யாலவ தரித்தவந் தணனே
கடவுள ரனைவருங் கைதொழு கழல்வேங்
கடரம ணாபள்ளி யெழுந்தரு ளாயே. 6

மலையிலக் காகவந் துதித்தனன் கதிரோன்
மாயிரு ஞாலத்து மன்னிரு ளோட்டி
இலைமறை காயென வெம்மதத் துள்ளு
மியைந்துள வத்துவே யெளியவிவ் வடியேன்
தலைமிசை வைத்தசெந் தாமரைத் தாளா
தாடலை யாகிய தத்துவப் பொருளே
கலைஞர்கள் கற்பனை கடந்தொளிர் திருவேங்
கடரம ணாபள்ளி யெழுந்தரு ளாயே. 7

துலங்கிய செஞ்சுடர் தோன்றினன் முற்றுந்
துன்னிருள் சோர்ந்து தொலைந்தது மாதோ
மலங்கிய முயலக மாயையை மிதித்து
மாநட மாகாளிக் காடிய தேவா
கலங்கிய சீவரைக் கருக்கட னின்று
கவலறு முத்தம கதிக்கரை காட்டும்
கலங்கரை விளக்கமாங் கண்ணுதற் றிருவேங்
கடரம ணாபள்ளி யெழுந்தரு ளாயே. 8

# திருவெம்பாவை

**அ**ண்ணா மலைரமண னன்பர்க் கருண்மாரி
கண்ணாலே பெய்யுங் கருணைத் திறம்பாடி
எண்ணா தனவெண்ணி யேங்கடியர் வெம்பாவத்
திண்ணா சறவே தெறுசே வகம்பாடிப்
பெண்ணா ணலிகளெனும் பேதத்தை நீத்துத்தம்
உண்ணா டுளத்தொளிரு முண்மை வளம்பாடிப்
பண்ணா ரவன்புகழைப் பாடுங்கீ தாமுதம்போற்
றண்ணா ரமைதி தழையேலோ ரெம்பாவாய். 1

**அ**ல்லாத வாணவஞ்சே ராருயிரை வாள்விழியாற்
கொல்லாதே கொன்று கொளுத்துமெய்ஞ் ஞானத்தான்
இல்லாதே யுள்ளனபோற் றோற்றுமெலா வற்றுக்கும்
இல்லாதாத் தோற்றி யுளதாகுஞ் செம்பொருளான்
கல்லாதே கற்றுணர்ந்த கல்விப் பொருடன்னைச்
சொல்லாதே சொல்லித் துலக்குமொளிர் மோனத்தான்
பொல்லா மணிரமணன் போகமெலா நன்கருள
வல்லா னடிவாழ்த்தி வாழேலோ ரெம்பாவாய். 2

**அ**னியதெய் வந்தொழல்கல் லாத்தெய்வக் கற்பால்
இனிதுபெய் யப்புயலை யேவல்கொளத் தக்கீர்
முனிமைமுக டாயமுழு மூதறிஞ ராயும்
அனாதிமல முத்தவியல் பாலேயு மன்றி
மனிதவுரு வாமண்ணில் வந்துமல பெத்த
அனாதையைநன் காளுமவ தாரநா ளாலும்
புனிதரம ணன்கமலப் பூந்தாள் கழூஉம்
புனிதநீ ராடிப் பொலியேலோ ரெம்பாவாய். 3

**ஆ**ரா வமுதம்போன் மானந்த வேங்கடர்மெய்
ஆரா வமுதம்போன் மன்பனார் புன்மூரல்
ஆரா வமுதம்போன் மங்கணார் கண்ணோக்கம்
ஆரா வமுதம்போன் மாசிரியர் வாய்ச்சொற்கள்
ஆரா வமுதம்போன் மாதியார் சீபாதம்
ஆரா வமுதம்போன் மண்ணலார் சீர்த்திமைகள்
ஆரா வமுதன்னா யன்னார் குணக்கடல்பாய்ந்
தாரா வமுதநீ ராடேலோ ரெம்பாவாய். 4

சகலமொடு கேவலமே சார்ந்துதெளி வாய
சுகலவமு மில்லாத சூனியமா மாயை
முகடிபான் மோகித்து மூதறிஞர் தம்மாற்
பகடிசெய் யப்பட்டுப் பாழ்ம்பிறப்புக் காளாய்
விகடங்கள் பாராட்டி வீண்காலம் போக்கா
தகளங்க னாநம்மை யாண்டா னடியோம்
முகடாய வேங்கடன்றாண் மோனமா முன்னி
அகடா மிதயத் தமிழேலோ ரெம்பாவாய். 5

**யா**ன்பரமென் றேசெருக்கா தென்னுள்ளே வேங்கடவன்
தான்கடவு ளாகத் தலைப்பட் டொளிர்வதனால்
ஊன்கெட் டுயிர்கெட் டுணர்வுகெட்டெ னுள்ளமும்போய்
நான்கெட் டதுவாய் நடுநின்ற மெய்ஞ்ஞான
வான்கடவு ளாக வழங்குதலை யாரறிவார்
யானொடுதா னென்னு மிருவோரு மன்றிக்கே
நானென்னுஞ் சொற்பொருளை நாடியித யத்தடத்து
நான்கெடநன் காடி நயவேலோ ரெம்பாவாய். 6

**போ**ற்றியுயிர்ப் போனகநின் பூன்றமா மோனநிலை
போற்றியொளிர் சின்மயநின் பொன்றாத சிற்சத்தி
போற்றியருள் பூத்தொழுகுன் பூங்கமலக் கண்ணோக்கம்
போற்றிபொரு ளந்தணநின் பொய்யாத மெய்யருள்கள்
போற்றிதரி சித்தவர்தம் புந்திகவர் புன்முறுவல்
போற்றிசுரு திப்பொருணின் புத்தமுதாங் கட்டுரைகள்
போற்றிதிரு வேங்கடநின் பொன்னடிதா மார்கழிநீர்
போற்றிவிளை யாடிப் பொலியேலோ  ரெம்பாவாய். 7

**வா**ழி மழைவண்மை வானாட ரந்தணர்கள்
வாழிநிரை நீதி வழுவாத நல்லரசு
வாழி விருந்தயரும் வாழ்க்கைத் துணைநலத்தார்
வாழி யகந்தைமல மாசற்ற மாதவத்தோர்
வாழி சிவரமணன் வன்ன மலர்க்கழல்கள்
வாழியவ னண்ணா மலைப்படிவ மாண்புறவே
வாழியருட் பார்வை வயப்பட்ட நல்லடியார்
வாழிசிவா னந்த மடுத்தேலோ ரெம்பாவாய். 8

# புனர்வசு வண்ணம்

**க**ண்ணா லுனது கதிர்முக நாங்கள் காணப்பெற்
றண்ணால் கண்ணா லாம்பய னார்ந்தன மென்பாரால்
எண்ணா நின்றா ரிதயத் தொளிரும் ரமணப்பே
ரண்ணா மலையான் புனர்வசு நன்னா ளதுவண்ணம். 1

**இ**தாவொரு கோடி யினர்போ லொளிரும் ரமணப்பே
ருதார குணாள னுவப்பது நோக்கி யுவப்பாரால்
சுதாவடி வான சொரூபா னந்த சுயஞ்சோதி
யதாவெமை யாண்டான் புனர்வசு நன்னா ளதுவண்ணம். 2

**கு**லவுந் தொண்டர் கூடித் தம்மிற் கொண்டாடும்
தலைவன் பேச்சே தம்முண வாகத் தழைப்பாரால்
இலகும் புகழா லெண்டிசை போர்த்த ரமணன்பேச்
சலகில் களிப்பாம் புனர்வசு நன்னா ளதுவண்ணம். 3

**பொ**ருளின் வண்ணம் புகழின் வண்ணம் பொலிவண்ணம்
தெருளின் வண்ணந் திருவின் வண்ணந் திகழ்வண்ணம்
இருளின் வண்ண மிலையாம் வண்ணம் ரமணன்கூ
ரருளின் வண்ணம் புனர்வசு நன்னா ளதுவண்ணம். 4

**மீ**ட்சியின் வண்ணம் விஞ்சையின் வண்ணம் வீட்டின்பக்
காட்சியின் வண்ணங் கேள்வியின் வண்ணங் கடவுண்மாப்
பூட்சியின் வண்ணம் பூரண வண்ணம் பொற்றாளுக்
காட்சியின் வண்ணம் புனர்வசு நன்னா ளதுவண்ணம். 5

**தே**ர்கலை யெல்லாந் தேறினுஞ் சிந்தை தெளியாது
நீர்கன ஞான நிலைபெற வேட்ட நெஞ்சத்தீர்
சார்கதி காட்டுஞ் சதாசிவ மூர்த்தி ஜயந்திச்சீர்
மார்கழி மாதப் புனர்வசு நன்னா ளதுவண்ணம். 6

**ஆ**தர மிக்க வடிய ரகக்கா ரகன்றோட
மூதுரை யாலே முகவுரை யோதி மோனஞ்சேர்
போதனை யாலநு பூதி புணர்க்கும் புலவோன்ஞா
னாதவ மெய்யன் புனர்வசு நன்னா ளதுவண்ணம். 7

**வி**தானங் கட்டித் தொங்கல் விட்டு விநோதஞ்சேர்
பதாகை தூக்கிப் பற்பல் சிறப்புப் பாரிப்பார்
எதாகிலு மோர்குற் றேவ லியற்றப் பெறாமோவென்
றதேநினை வாவர் புனர்வசு நன்னா ளதுவண்ணம். 8

**மா**தவர் வேதியர் மந்திர மோதி வழுத்துவார்
கோதையர் தாந்தங் கொழுந ரொடும்பின் குறுகுவார்
பேதைய ரானோர் மேதைய ராகப் பிறங்குவார்
ஆதர நாஞ்செய் புனர்வசு நன்னா ளதுவண்ணம். 9

**தா**ழிசை வண்ணஞ் சந்த விருத்தஞ் சாற்றுவார்
ஏழிசை வாண ரியாழொடு வீணையி லேற்றுவார்
தோழந் தோகையர் பூப்பலி பொற்சுணந் தூவுவார்
வாழி ரமணன் புனர்வசு நன்னா ளதுவண்ணம். 10

## வாழ்த்து

**மோ**க மொழிக்கும் முனிவன் றிருவாய் மொழிவாழி
சோக மகற்றுஞ் சுத்தாத் துவிதச் சுடர்வாழி
ஏக சொரூப ரமணன் கருணை யியல்வாழி
காக முறவு கலந்தாற் போலுங் கணம்வாழி. 11

# திருப்பல்லாண்டு (2)

பல்லாண் டாதி பராபர னுக்குப் பல்லாண்டு
பல்லாண் டந்தப் பரசொரு பத்தின் படிவத்தாற்
பல்லாண் டெங்களை யாளவந் தானுக்குப் பல்லாண்டு
பல்லாண் டெங்கோ பகவான் ரமணற்குப் பல்லாண்டே. 1

பல்லாண்டு பாண்டிச் சுழியற் பதியற்குப் பல்லாண்டு
பல்லாண்டு சோணைப் பருப்பதத் தானுக்குப் பல்லாண்டு
பல்லாண் டடியோம் பழமுதல் வைப்பற்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. 2

பல்லாண்டு கீளொடு கோவணத் தானுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு தண்ட கமண்டலத் தானுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு கைச்சிறு கூறைகொண் டானுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. 3

பல்லாண்டு பூதிசிந் தூரத் திலகற்குப் பல்லாண்டு
பல்லாண்டு சத்தி சிவசொரூ பத்தற்குப் பல்லாண்டு
பல்லாண்டு தன்மயப் பார்வையாந் தீர்த்தற்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. 4

பல்லாண்டு கண்ணாற் பரங்காட்டு வானுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு மோன வுபதே சகனுக்குப் பல்லாண்டு
பல்லாண் டியல்பாய நிட்டா பரனுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. 5

பல்லாண் டிருடி கணந்தொழும் பாதற்குப் பல்லாண்டு
பல்லாண் டடியனை யுய்யக்கொண் டானுக்குப் பல்லாண்டு
பல்லாண்டென் சிந்தைப் பரிமே லழகற்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. 6

பல்லாண்டு மோகப் பரிசழிப் பானுக்குப் பல்லாண்டு
பல்லாண் டகத்தொளிர் சுப்பிர தீபற்குப் பல்லாண்டு
பல்லாண்டு சிந்தா குலந்தவிர்ப் பானுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. 7

## காலைப்பாட்டு

1. அருண னுதித்தன னருண கிரிதன்னி
லழகிய ரமணரே வாரும்;
அருணாச லேசரே வாரும்.

2. சாலைக் குயிலோசை காலையிற் கூவிற்று
சற்குரு ரமணரே வாரும்;
சாம்பவி பாகரே வாரும்.

3. சங்க மொலித்தது தாரகை மங்கின
இங்கித ரமணரே வாரும்;
ஈச சுரேசரே வாரும்.

4. கோழிகள் கூவின குருகுக ளியம்பின
நாழிகை யாச்சுது வாரும்;
நள்ளிரு ளகன்றது வாரும்.

5. சின்னங்கள் காகளம் பேரிகை யார்த்தன
பொன்னங்க ரமணரே வாரும்;
போத சொரூபரே வாரும்.

6. காகங் கரைந்தது காலையு மாயிற்று
நாகா பரணரே வாரும்;
நஞ்சணி கண்டரே வாரும்.

7. கற்பனை யொழிந்தது கமலங்க ளலர்ந்தன
விற்பன ரமணரே வாரும்;
வேதாந்த ரூபரே வாரும்.

8. முக்குண ரகிதரே முத்திநா டாள்வோரே
சற்குண ரமணரே வாரும்;
சாந்த சொரூபரே வாரும்.

9. சத்துச்சித் தானந்த வடிவினைச் சார்ந்திடுந்
தத்துவ ராயரே வாரும்;
தாண்டவ மூர்த்தியே வாரும்.

10. இன்பதுன் பமில்லா வேகாந்த மேடையி
லன்புருக் கொண்டோரே வாரும்;
ஆனந்த மோனரே வாரும்.

## கும்மிப்பாட்டு

ரமண குருபதம் பாடுங்கடி யத்தைத்
தேடிநின் றேரமித் தாடுங்கடி — பெண்காள்
கூடிநின் றேரமித் தாடுங்கடி.

1. தங்குஞ் சிவலோகந் தன்னைவிட் டுத்தய
வாகத் திருச்சுழி தன்னில்வந்து;
அங்கு மிருக்க மனஞ்சகி யாமலே
யருண கிரிதன்னை நாடிவந்தான். (ரமண)

2. விரும்பி வந்திடு மன்பர்க ளைவிரு
பாக்ஷ குகையினிற் றானிருந்து;
கரும்பு போல்ருசி காட்டிக் களித்திடக்
காட்சிதந் தானருட் பார்வையுடன். (ரமண)

3. சோண கிரிதன்னிற் சோதி வடிவதாய்த்
தோன்றிடு மீச னருளாலே;
ஆணவ காமிய மாயை யறுத்தெறிந்
தான்ம சுகத்திற் களித்திடுவான். (ரமண)

4. எங்கு நிறைந்த பராபர மாயொளி
தங்கு மிடமதொன் றில்லாமலே;
கங்குல் பகலற நின்ற விடமதைக்
கண்டு களித்தனன் றானாகி. (ரமண)

5. பஞ்சபூ தங்களிற் றானிருந் தானவன்
பஞ்சகோ சங்களைத் தானறுத்தான்;
பஞ்சதன் மாத்திரை தான்குடித் தானவன்
பஞ்சவிந் தியத்தைத் தான்ஜயித்தான். (ரமண)

6. மூன்று சரீரமுந் தான்மறந் தானவன்
மூன்றவஸ் தைகளுந் தானொழித்தான்;
மூன்று குணங்களுந் தாண்டிவிட் டானவன்
மூன்று பதங்கடந் தேறிவிட்டான். (ரமண)

7. பின்னும் வினையதுங் காணாண்டி பிறை
யோங்கு தனிச்சிவ மானாண்டி;
இன்னுஞ் சீவவுயி ரானாண்டி யினி
தாகப் பரவுயி ரானாண்டி. (ரமண)

| | |
|---|---|
| 8. | ஜீவத் துயிரையும் பரத்து யிரையுஞ்<br>சேர்த்திறு கப்பிடித் தொன்றாக்கி;<br>பாவத்தி னின்று தனைமறந் தேபர<br>மாகிப் பழுத்துத் தனித்துவிட்டான். (ரமண) |
| 9. | வீணினில் வாயை வளர்ப்பத னாலென்ன<br>வேங்கட ரமண வேதியனே;<br>காணினிக் காட்சியென் றோதி யறைந்தானே<br>கண்விழி யாலென்றன் கன்னத்திலே. (ரமண) |
| 10. | ரமணனென் சற்குரு ரமணனென் போதகன்<br>ரமணனென் னாயக னாகிவிட்டான்;<br>நமவென் றவன்பத நாடி விழுந்துநாம்<br>நாட்டிய மாடுவோம் ஞானப்பெண்காள்.(ரமண) |

# பொன்னொளிர் பத்து

| | |
|---|---|
| 1. | பொன்னொளிர் வடிவி னானே பூரண வதனத் தானே<br>தன்னருஞ் சுவாநு பூதி தரையெலா மணக்க வேழை<br>உன்னரும் புகழைக் கேட்டிவ் வுலகெலாந் தேடி வந்தேன்<br>என்னரு ளிறையே ஞான ரமணனே ஜோதிக் குன்றே. |
| 2. | ஜோதியே வடிவாய் நின்ற சோணமா சைலந் தன்னில்<br>வேதிய வுருவி னோடு விருபாக்ஷ குகையின் மேவும்<br>ஆதியே யனாதி வைப்பே யமலனே ரமணா வென்னைச்<br>சோதியா தாண்டு கொள்வாய் சிற்பர சொரூப நீயே. |
| 3. | சிற்பரா னந்த வாழ்வே சிவத்தொடுங் கலந்த தேனே<br>அற்புதா னந்தப் பாகே யகண்டனே ரமணா வுன்னைக்<br>கற்பகத் தருவாய் நாடிக் கடிதெழுந் தோடி வந்தேன்<br>விற்பன வுருவே காவாய் விமலனே யருட்கண் டந்தே. |
| 4. | தந்திடாய் தளிர்பொற் பாதந் தமியனேன் சிரத்திற் சூடி<br>நொந்திடா வாழ்வ தெய்தி நொடியதிற் பவநோய் போக்க<br>அந்தணா வமரர் காணா வருணைவாழ் ரமணா மோனா<br>எந்தநா ளடைவ னுன்னை யிருவிழி மணியே சொல்லாய். |
| 5. | மணியெனப் புகழ்வ தல்லான் மற்றொன்று மறியா வேழை<br>அணிமையி னின்று யானு மலறுவ தறிந்தி டாயோ<br>தணியென தகப்பே யின்று சடுக்கென வெனைவிட் டோடத்<br>துணியதை ஞான வாளால் சுந்தர ரமணா போற்றி. |
| 6. | ரமணனே ஜகத்தி னோடும் ரவியுடு கணங்க ளானோன்<br>ரமணனே யகத்தி லாடும் ரத்தினச் சுடர்வி ளக்காம்<br>ரமணனே விமல வேத ராட்டினத் தாடுந் தேவன்<br>ரமணனே ஞான நாட்டில் ரமித்திடு மரசாய் நின்றோன். |
| 7. | நின்றிடு நினைவு தன்னை நிமிடத்தி னீக்கி நெஞ்சை<br>அன்றயன் றிருமா லாய்ந்திட் டறிந்திடா வழகன் பாதம்<br>சென்றிட நிறுத்துஞ் சோம சேகர ரமண மூர்த்தி<br>என்பெருந் துயர நீக்கா யேகனே யோக வாழ்வே. |
| 8. | வாழ்ந்திடு முலகி னோடு வடிவுறு நாம மெல்லாந்<br>தாழ்ந்திட ஞானப் பார்வைத் தழலதைத் தனக்குள் வைத்தோய்<br>ஆழ்ந்திடும் யோக ஞான ரமணனே யழகின் மிக்கோய்<br>சூழ்ந்திடுஞ் சுடரே சோண மலைவளர் புனித தேவே. |
| 9. | தேவனே ரமணா பாதந் தேடினேன் றெவிட்டா ஞான<br>பாவனா தீத மோனப் பரம்பொரு ளுருவி னானே<br>ஜீவனுஞ் சிவமு மொன்றாய்த் தேக்கிய வுளத்தி னானே<br>சாவதும் பிறப்பு மில்லாத் தத்துவ முடிவாய் நின்றோய். |
| 10. | நின்றிடுஞ் சோண சைல நிலைத்திடும் ரமணன் வாழி<br>மின்றிகழ் சடைய னோடு விருபாக்ஷ குகையும் வாழி<br>வென்றிடுந் துன்பம் போக்க வேங்கட ரமணன் சொல்லும்<br>பொன்றிகழ் விருத்த மாலை பொலிவுற வாழி வாழி. |

# பொன்னையொத்த பத்து

1. பொன்னை யொத்த பொருப்புரு சோணையில்
அன்னை யொத்த வருட்குரு வாகிய
மின்னை யொத்த ரமணமெய் வேதியன்
றன்னைக் கண்டவர் தம்மை மறப்பரே.

2. ஆதி வேதிய னன்புரு வாகியோர்
ஜோதி மாமலை சோணையில் வந்தவா
நீதி யோது ரமண நிரஞ்ஜனா
காதி லோது கதிபெறு மார்க்கமே.

3. பஞ்ச பூதத் தடங்கிடாப் பாவனன்
மஞ்சு றுங்குகை மாவிரு பாக்ஷியிற்
பஞ்சு தங்கு பதத்துட னண்ணினான்
செஞ்சொ லின்ப ரமணமெய்த் தேசிகன்.

4. மண்ணு நீரும் வளர்ந்தெழு தேயுவும்
விண்ணுங் காலு நுழைந்து விளங்கிடும்
எண்ணுஞ் சங்கையு மெல்லையு மின்றிய
கண்ணுக் காவி ரமணனென் காதலன்.

5. அருணை வாழு மழக னமுதனென்
கருணை வாழுங் கடவுளன் காட்சியான்
தருண ஞான சதோதய சூரியன்
பொருண லந்தரு பூரண போதகன்.

6. கஞ்சன் மாலுங் கடிதெழுந் தோடியும்
மிஞ்சி நின்று மிளிரும் பொருப்பிடைக்
கொஞ்சி நின்று குலவுவ தன்றியும்
நெஞ்சி னுள்ளும் ரமண னிறைந்தனன்.

7. வாரும் வாரும் ரமண மகாமுனி
தாருந் தாரு மருளெனத் தாழ்ந்திட
ஆருங் கோரும் வரம தளிப்பவன்
காரு ணூறிக் கசிந்திடு மாரியான்.

8. தங்கு மின்பந் ததும்பிடு பாடலான்
சங்கை யின்றி ஜகத்தொளிர் ஞானியான்
கங்கை தங்கு கடவு ளுருவினான்
இங்கு தங்கு மிறைவன் ரமணனே.

9. எத்தி சையரு மன்பரு மெய்தியே
அத்த னத்த னெனத்தொழு தேத்துவார்
முத்த னானந்த மோன ரமணனை
சத்துச் சித்தெனத் தாவித் தொழுவரே.

10. வாழி வாழி ரமண மகாகுரு
வாழி வாழி யருண மகாகிரி
வாழி வேங்கடன் வாய்சொலும் பாடல்கள்
வாழி யூழிதோ றன்பர்கள் வாழியே.

# ரமணஸத்குரு

ரமண ஸத்குரு ரமண ஸத்குரு
ரமண ஸத்குரு ராயனே;
ரமண ஸத்குரு ரமண ஸத்குரு
ரமண ஸத்குரு ராயனே.

1. புகழும் பொன்னுல கத்து வானவர்
போற்றி நின்று புகழ்ந்திடும்;
திகழு நன்னில மாந்தி ருச்சுழி
தன்னில் வந்த தயாபரன். (ரமண)

2. அழகு சுந்தர ரன்பி னில்வரு
மமுத வாரிதி யருணையான்;
மழவி டைப்பொரு ளருள்ப டைத்திடு
வடிவி லாவடி வானவன். (ரமண)

3. அமல ஞான வருட்பெ ருங்கட
லருணை யங்கிரி தன்னிலே;
விமல மேயுரு வாகி வந்தொரு
விருப நற்குகை மேவினான். (ரமண)

4. வாது செய்திடு மாயை தன்னை
வளைத்து நின்று மிதித்தவன்;
சூது செய்புல னோடு வஞ்சகச்
சூழ்வி னைத்தொகை யற்றவன். (ரமண)

5. அருணை யீச னெடுத்த ணைந்திடு
மன்ப னென்குரு நாயகன்;
கருணை யேவடி வாக நின்றிடு
கற்ப கத்தரு வாகினோன். (ரமண)

6. மூன்று தேக மறந்து முப்பத
வாழ்வி னிற்குடி யேறினான்;
தோன்று மிச்சக வாழ்வி னிற்களி
யாது நின்றிடு தோன்றலான். (ரமண)

7. பிண்ட மேவிய நாதனே பிர
மாண்ட மேவிய நாதனாய்க்;
கண்டு நின்று கனிந்து ளேகமே
காட்சி யாய்க்களி கொண்டவன். (ரமண)

8. பொன்னி றந்தவழ் மேனி யன்புக
ழோங்கு செஞ்சடை வேணியன்;
தன்ன ருங்குரு வாக வாய்த்திடு
தத்து வப்பொரு ளானவன். (ரமண)

9. பஞ்ச பூத நிறைந்து நின்றவன்
பஞ்ச கோசம தற்றவன்;
அஞ்ச லித்திடு மன்பர் துன்ப
மொழிக்கு ஞான விதாயகன். (ரமண)

10. முக்கு ணத்தடை யற்ற வன்முத
லாய தேவ னிராமயன்;
பக்கு வத்தவர் வந்து நின்று
பணிந்தி டும்பத சேவையான். (ரமண)

11. ஆதி காரண காரி யங்க
ளறிந்த சின்மய பூரணன்;
வாதி யாமல மாயை தன்னை
வதைத்து வீசிடு மாரணன். (ரமண)

12. தேவர் யாவரும் வந்து நின்று
துதித்தி டும்பத வைபவன்;
காவ லாகிமெய்ஞ் ஞான நாட்டர
சாக நின்றிடு காரணன். (ரமண)

13. வேத நாயகன் வேத பூஷணன்
வேத மேயுரு வாயவன்;
காத லாய்ப்பர வாழ்வி னிற்கடி
தேறி நின்று களித்தவன். (ரமண)

14. துரிய மேவடி வாகித் தூவெளி
யாட ரங்கம தாகினோன்;
கரிய தாய்ச்சக மேழொ டண்டங்
கலந்து நின்ற கலப்பிலான். (ரமண)

15. சின்ம யத்தரு விற்ப ழுத்திடு
தீங்க னிச்சுவை யாகினோன்;
தன்ம யப்பொரு ளாய்த்த னித்திடு
சச்சி தானந்த மாகினோன். (ரமண)

16. அப்பி லுப்பென வென்ம னக்குகை
யொப்பி நின்றிடு மண்ணலான்;
அப்ப னொப்பவ னன்னை யொப்பவ
னற்பு தப்பொரு ளானவன். (ரமண)

17. ஜாக்கி ரங்கன வோடு சாற்று
சுழுத்தி வாதைய தற்றவன்;
வாக்கி றந்து நிறைந்து நின்றதோர்
வாக்கி யப்பொரு ளானவன். (ரமண)

18. ஸநாத னப்பொரு ளான வேதியன்
ஜாதி பேதம தற்றவன்;
அநாதி நின்மல ஞான நாயக
னன்பி னில்வரு ஜோதியான். (ரமண)

19. சற்கு ணக்கட லான நற்குணன்
சற்ச னர்புகழ் நீதியான்;
அற்பு தச்சுவை யான பாகின
னசிப தத்துரு வானவன். (ரமண)

20. பக்தி யோடு பணிந்து நின்றிடு
பக்த கோடியர் தங்களை;
முக்தி மெய்க்கரை காட்டி மூதறி
வுற்றி டத்வஜ மிட்டவன். (ரமண)

21. அடாத செய்கை யளிக்கு மிந்திய
வஞ்ச னைப்பொறி வாயிலில்;
விடாது வீழ்ந்து விளிக்கு மென்மனப்
பேயை வாவென வாளுவாய். (ரமண)

22. அங்க மேறி யகங்க ரித்திடு
மாண வப்படு பாவியைத்;
துங்க ஞானவாள் கொண்டு சாடுவீர்
தூம ணிச்சுட ராகினீர். (ரமண)

23. பாநு வம்ச விநோத ராமனும்
பங்க யப்பெரு வாழ்வனும்;
மானுஞ் சூல மணிந்த தேவனு
மாத வக்கும ரேசனும். (ரமண)

24. போற்றி யென்மனக் கோயி லுற்றிடு
புண்ணி யத்திரு மேனியாய்;
போற்றி நின்முகம் போற்றி நின்மனம்
போற்றி நின்பத மையனே. (ரமண)

25. நச்சி நின்று நவிற்று வேங்கட
ரமண னாவிலு மேவிய;
உச்சி தச்சுவை யான வுன்பத
முச்சி வைத்திட வேண்டினேன். (ரமண)